இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம், நிறுவல், செயல்படுத்தல், மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை.

## IFB No: DRP/ACC/07/01/2024 - II

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு **கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம்,நிறுவல், செயல்படுத்தல், மற்றும் பராமரிப்பதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB).

03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் **0115226172** மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப்பிரிவில், **“சி” பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் (**www.drp.gov.lk**). மூலமாக **2024.08.14** முதல் **2024.09.09** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.08.14** ஆம் திகதியிலிருந்து **2024.09.09** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் “சி” பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாய் (ரூ.5,000.00)** மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல்** மற்றும் **நகல்) 2024.09.10** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், “சி” பகுதி, 12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்**. காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. மனு தொடர்பான கூட்டம் **2024.08.21 ஆம் திகதி பி.ப 2.00** மணிக்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், “சி” பகுதி, **13ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** இடம்பெறும்.

07. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் (240,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தலைவர்**

**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**

**12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**

**பத்தரமுல்லை.**

SELACINE MEDIA SOLUTIONS